<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 251/2019 | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு.தயாளன் | | | |
| **Date** | : | **19.05.2026** | | | |
| **Time** | : | **10.34 a.m to 11.08 a.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு.தயாளன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

தொ.சா.ஆ.**53** ஆன்லைனில் இருந்து எடுக்கப்பட்ட Site Line Hierarchy என்றால் ஆமாம். அதில் கண்டுள்ள அஸ்கர் அலி என்பவர் ஆப்பரேட்டர் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் அஸ்கர் அலிக்கு மெயில் ஐடி இருப்பதாகவோ அது சம்பந்தப்பட்ட விவரங்களோ கண்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் கண்டுள்ள M.ஆனந்தராஜ், அருண்குமார், ஆகியோர் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டவரா என்றால் இல்லை. யார் யாருக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் எம்.ஆனந்தராஜ் என்ற பெயர் கொண்ட ஒரே ஒரு நபர் மட்டும் தான் இருக்கிறார் என்றாலும் அவர் பெயர் தான் தொ.சா.ஆ.**53** ல்

கண்டுள்ளது என்றாலும் உறுதியாக சொல்ல முடியாது. தற்போது வரை Team Leader Allowance வழங்கப்பட்டு வருகிறது என்றால் ஆமாம். ஜுன் 2025 க்கான ஊதிய உயர்வு வழங்கப்பட்டு விட்டதா என்றால் தொழிற்சங்கத்துடன் பேசி வழங்கப்பட்டு விட்டது. ஆனால் அவர்கள் வழங்கிய தொகைக்கு எங்கள் சார்பாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊதிய உயர்வை தொழிற்சங்கம் பேசிதான் வாங்கி கொடுத்தார்கள் என்ற விவரத்தை என்னுடைய சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் பத்தி 8 ல் சொல்லி உள்ளேன். நான் சொல்லும் விவரம் பத்தி8 ல் காணப்படவில்லை என்றால் சரியல்ல. 2025 ல் ஆப்பரேட்டர்களுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் இல்லை மினிட்ஸ் தான் போடப்பட்டது. டீம் லீடர்ஸ்க்கு ஜுலை 2026 அடுத்த ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றால் தெரியாது. ஒவ்வொரு வருடமும் எந்த மாதம் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றால் ஒவ்வொரு வருடமும் வழங்குவது இல்லை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் தொழிற்சங்கம் பேசி அதன் பிறகு வழங்குவார்கள். இதுவரை ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களில் டீம் லிட்டருக்கு இவ்வளவு ஊதிய உயர்வு வழங்கப்படும் என ஏதேனும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதா என்றால் 2015 ஆம் ஆண்டிற்கு மட்டும் ஏற்படுத்தப்பட்டது அதன் பிறகு வழக்கு இருக்கும் காரணத்தினால் ஏற்படுத்தப்படவில்லை. ஊதிய உயர்வு டீம்

லீடர்களுக்கு 2015 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ளதா என்பது அதனை பார்த்தால் தெரிய வரும் என்றால் அதில் இருக்காது. நான் தாக்கல் செய்திருக்கும் கடிதங்களில் (தொ.சா.ஆ.54 முதல் 58) எங்களுக்கு தொழிலாளர் அந்தசு வழங்கப்பட வேண்டும் டீம் லீடர் என்ற வரையறையை வேண்டாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தொ.சா.ஆ.59-ல் கண்டுள்ள சுதாகர் ஆபரேட்டர் என்றால் ஆமாம். நானும் ஆப்ரேட்டர் என்றால் ஆமாம். என்னிடம் கட்டுப்படுவது என்னுடைய சம்பள ரசீதா என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.213. என்னிடம் கட்டுப்படுவது இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எஸ்.சசிகுமார் என்பவரின் சம்பள ரசீது என்றால் தெரியாது. எஸ்.சசிகுமார் ஆரம்பத்தில் ஆப்பரேட்டராக இருந்தால் என்றால் ஆமாம். எனக்கு Performance Allowance, Service Allowance, மற்றும் DA வழங்குகிறார்கள் என்றால் ஆமாம். Performance Allowance, Service Allowance, மற்றும் DA டீம் லீடர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களின் சம்பள ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஆப்பரேட்டர் யாரும் Team Leader Allowance வாங்குவது இல்லை என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படுவது சசிகுமாரின் Role profile என்றால் தெரியாது. Team Leaders-ன் Job Role விவரம் எனக்கு தெரியும். உண்மையை மறைப்பதற்காக முன்னுக்குப் பின் முரணான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தொழிற்சங்கம்

யாருக்காக வழக்கு நடத்துகிறது என்பதை காட்ட இதுவரை ஆதாரம் தாக்கல் செய்யப்படவில்லை எனவே வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தொ.சா.ஆ.61 கடிதத்தை நிர்வாகத்திற்கு எழுதியதாக சொல்லி உள்ளோம் என்றால் ஆமாம். அதற்கு நிர்வாகம் பதில் கொடுத்ததா என்றால் கொடுத்தார்கள். அந்த பதில் கடிதம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. தொழிற்சங்கம் மூலம் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் டீம் லீடர் என்ற நிலையில் உள்ளவர்கள் Staff Category யில் வருவார்கள் என்பதால் அவர்களுக்கு தொழிற்சங்கம் மூலம் எந்தவித ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும் தவறு. ஆப்பரேட்டர்களுக்கு ஷிப்ட் Allowance உள்ளது என்றால் ஆமாம். டீம் லீடர்களுக்கு ஷிப்ட் Allowance இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும். டீம் லீடர்கள் தொழிலாளி என்ற வரையறைக்குள் வரமாட்டார்கள் என்பதால் தொழிற்சங்கம் அவர்களுக்காக இந்த வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் டீம் லீடர்கள் தொழிலாளி என்ற வரையறைக்குள் தான் வருவார்கள். தொழிற்சங்கம் கொடுத்த கோரிக்கையில் டீம் லீடர்களை தொழிலாளி என்ற வரையறைக்குள் கொண்டு வர வேண்டும் என முன் வைக்கப்பட்டது என்றால் ஆமாம்.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-.S.Sujtha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:19.05.2026.